


குடுமி

ஐம்பதுகளிலேயே ஸ்ரீரங்கத்தில் குடுமி வழக்கொழிந்துகொண்டிருந்தது. நாதஸ்வரக்காரர்கள் துறந்துவிட்டார்கள். 'பண்ணிவைக்கும்' வாத்தியார்களும் கோவில் அர்ச்சகர்களும்தான் தொழில் தேவைக்குக் குடுமி வைத்திருந்தார்கள். பள்ளிச் சிறுவர்களில் ஒரு சிலர் பெற்றோரின் பிடிவாதத்தின் விளைவாக நாலாவது அஞ்சாவது வரை குடுமி வைத்திருந்து, அதற்கு நவராத்திரி சமயத்தில் அழகாகத் தலைவாரிப் பின்னப்பட்டார்கள்.

கோல்டன் ராக் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் 'புல் சூட் ஐயங்கார்' லௌகீகத்துக்காகக் கிராப் வைத்திருந்தாலும் உற்றுப்பார்த்தால் பின்னால் ஒரு மெலிய கற்றைக் குடுமிபோல் பாவனை செய்யக் கடைசி அடையாளமாகச் சொல்லலாம்.

பெரும்பாலும் அவர் அதைத் தம் தொப்பிக்குள் ஒளித்து வைத்திருந்தார். கோயில் காரியங்கள் பண்ணுகிறவர் அனைவரும் குடுமி வைத்திருந்தாலும் சினிமா போகும்போதோ கோட்டைக்குப் போகும்போதோ முண்டாசுக்குள் ஒளித்து வைத்துக்கொண்டுதான் போவார்கள். திராவிடக் கழகக்காரர்களாலும் மற்ற சில சிறார்களாலும் 'போறான் பாருயா உச்சு குடுமி' என்று இகழப்படுவதைத் தவிர்க்க உபாயம் இது.

இவ்வாறு குடுமி அரிதாகிக்கொண்டிருந்த காலத்தில் உங்களுக்கு ராகவனின் கதையைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

ரங்குவின் வீட்டையும் கோதாவரி மாமி வீட்டையும் தாண்டி 'கோகோடம்ளர்' என்று சொல்லப்பட்ட பாஷ்யமையங்கார் வீட்டுக்கு முன்னே இருந்தது ராகவனின் வீடு. அவன் அப்பா 'ஏ. ஆர்' என்று அழைக்கப்பட்ட ராமசாமி ஐயங்கார் கச்சிதமாக இருப்பார்.

சோடா பாட்டில் கண்ணாடி போட்டுக்கொண்டு ஐஸ்கூலில் எட்டாவதுவரை கணக்கு வாத்தியார். விறகுக்காரனிடம் மாலை ஐந்து மணிவரை எட்டணாவுக்குப் பேரம் பேசுவார். அவருக்கு ஒரு பெண், நான்கு ஆண் மக்கள். அவர்களில் கடைசிதான் ராகவன். மற்ற பிள்ளைகள் சுமாராகப் படித்து பிஎச்இஎல்லிலும், தஞ்சாவூரிலும், புகளூர் சர்க்கரைத் தொழிற்சாலையிலும் கிளர்க்குகளாகப் போய்விட, ராகவன் மட்டும் பெரிய வேலைக்கு வருவான் என்றுதான் அனைவரும் எதிர்பார்த்தோம்.

ராகவன் ஜோசப் கல்லூரியில் மனுப் போட்டான். கணிதத்தில் புலியாக இருந்ததால் மேத்ஸ் ஆனர்ஸ் சேர்ந்தான். ராகவன் கருகருவென்று ஒரு பெண்பிள்ளையளவுக்குக் குடுமி வைத்திருந்தான். முன் நெற்றியில் கொஞ்சம் குறைத்து முக்கால் மண்டையில் புறப்பட்டுப் பின்னோக்கிச் சென்ற கருநாகம் போன்ற கூந்தல். அதை அவன் காலை வேளையில் ஒரு சரசாங்கியின் நளினத்தோடு சேகரித்து வாரி எண்ணெய் தடவி முடிப்பான். அப்படியே பந்துபோல் பின்பக்கம் சுருண்டுகொண்டு கச்சிதமாக அமையும். அவனிடம் மற்ற பெண்மைக் குணங்கள் ஏதும் இல்லை. அவன் முகத்துக்கு அந்தக் குடுமி ஒரு தேஜஸ்.

அவன் பிரம்மச்சரியத்தினாலும் சபலமற்ற களங்கமற்ற முகத்தினாலும் ஒரு ஜொலிப்பும் சேர்ந்துகொண்டது. என்னிடத்தில் எப்போதாவது கணக்கில் சந்தேகம் கேட்க வருவான். அவன் சந்தேகங்கள் சந்தேகங்கள் இல்லை.

இப்படிச் சரியா என்று சரிபார்க்கத்தான் வருவான். பாட்டி எது கொடுத்தாலும் வாங்க மாட்டான். அதிகம் பேச மாட்டான் அவன். அதுவும் என் தங்கை வத்சலாவைக் கண்டால் உடனே ஓடிப் போய்விடுவான். வத்சலாகூட, "என்னடா, அந்தப் பையன் இப்படி வெக்கப்படறான்?" என்பாள்.

"வெக்கம் இல்லை. மரியாதை."

"எனக்கு ஒரு நாள் அவன் குடுமியை விடுதலை பண்ணி, நன்னா தலைவாரிப் பிச்சோடா போடணும்னு ஆசையா இருக்குடா."

"கேட்டுப் பார்க்கறேன். ஆனா அவன் சம்மதிக்க மாட்டான்."

"அவன் நன்னா படிக்கிறானாமே, கலெக்டரா வருவாங்கறா?" என்று கேட்டாள் பாட்டி. "நம்ம வத்சலாவுக்கு வேணா பார்த்துரலாமா?"

"இந்தக் குடுமியை எடுத்தாத்தான் சான்ஸ்" என்றாள் வத்சலா.

"ஏண்டி, அவனுக்குக் குடுமி பாந்தமாத்தான் இருக்கு."

"இல்லை பாட்டி என் ப்ரண்ட்ஸ் எல்லாம் கலாட்டா பண்ணுவா, குடுமியைப் போய்க் கட்டிண்டியேனு. அவன் எப்ப எடுக்கப் போறான்னு கேட்டுரு" என்று வத்சலா விளையாட்டுக்குச் சொன்னாளாம்.

ஒரு தடவை பாட்டி இயல்பாகவே கேட்டுவிட்டாள், "ஏண்டா ராகவா, நீ எப்படா உன் குடுமியை எடுக்கப்போறே?"

"எதுக்கு எடுக்கணும் மாமி?"

"இப்ப எல்லாரும் கிராப்பு வெச்சுண்டிருக்கா ... உலகத்தோட ஒட்டி வாழனும் சொல்லுவா."

"பஸ்ல யாரும் உன்னைக் கலாட்டா பண்ணலையா?" என்று கேட்டாள் வத்சலா.

அவன் நேராகப் பார்க்காமல் பதில் சொன்னான்: "கலாட்டா பண்ணுவா, பண்ணா பண்ணிட்டுப் போறா; நான் கண்டுக்கறதே இல்லை. கலாட்டா பண்ணுவாங்கறதுக்காகக் குடுமியை எடுக்கணுமா?"

"இப்ப ஆனர்ஸ்ல அட்மிஷன் கெடைச்சிருக்கே ஜோசப் காலேஜ்ல, அவா ஏதும் ஆட்சேபணை தெரிவிக்கலையா?"

"லேசா சொல்லிப் பார்த்தார் ப்ரின்சிபால்; வெள்ளைக்காரர். 'ஆர் யு கோயிங் டு கீப் திஸ் டஃப்ட்'னு. 'எஸ் ஃபாதர்'னேன். உன் குடுமியை எடுக்கச் சொன்னா என்ன பதில் சொல்வேன்னார். எனக்கு அட்மிஷன் வேணாம்னு சொல்லிடுவேன்னேன் ...

"நல்ல தைரியம்டா உனக்கு."

"தைரியம் இல்லை மாமி! எனக்குப் பிடிச்சிருக்கு. குடுமியும் நெத்திக்கு இட்டுக்கறதும் சின்ன வயசிலிருந்தே பழக்கமாய்டுத்து. அப்பா கூட ஜாடை மாடையா சொல்றார் எடுத்துருன்னு. அம்மா என் அக்கா எல்லாரும் சொல்றா. என் அண்ணா யாரும் என்னோட சினிமா போறதுக்கே வெக்கப்படறா."

"சினிமா போவாயா நீ?" என்றாள் வத்சலா ஆச்சரியத்துடன்.

"எப்பவாவது வருஷத்துக்கு ஒரு தடவ 'ஔவையார்', 'லிவிங் டெசர்ட்' மாதிரி நல்ல படமா வந்தா போவேன்."

ஜோசப் காலேஜ் அவன் குடுமியைவிட அவன் வாங்கிய மார்க்கை அதிகம் கௌரவித்ததால் அவனுக்கு அட்மிஷன் கிடைத்தது. அங்கே 'அல்ஜிப்ரா சீனிவாசன்' என்று ஒரு கணக்கு வாத்தியார் எங்களுக்குத் தூரத்து உறவு. அவர் ஒருமுறை எங்கள் வீட்டுக்கு வந்தபோது வத்சலாதான் கேட்டாள்: "மாமா, எங்க பக்கத்திலிருந்து ராகவன்னு ஒரு பையன் உங்க கிளாஸ்லதான் படிக்கிறான்."

"எந்த ராகவனைச் சொல்றே? குடுமி ராகவனா? குட்டை ராகவனா?"

"குடுமி கடுக்கன் சீசூர்ணம்!"

"ஓ! அவனா . . . தெரியுமே. நன்னா தெரியுமே!"

"எப்படிப் படிக்கிறான்?" என்று கேட்டேன்.

"அந்தப் பையன் ஒரு ஜீனியஸ்ப்பா. ராமானுஜத்தோட மறு பிறவின்னு சொல்லலாம். அன்னிக்கு டென்சார் கால்குலஸ்ல ஒரு கணக்கு. நானும் ப்ரான்சிஸ் ராஜூம் திணறிண்டிருந்தோம். இவன் என்னடான்னா சடக்குன்னு போட்டுட்டுப் பயந்துண்டே, 'இப்படி போட முடியுமான்னு பாருங்க சார்'னு கேக்கறான். அசந்து போய்ட்டோம். திஸ் பாய் வில் கோ ப்ளேஸஸ். ஆனா குடுமியை எடுக்கணும்!"

"எல்லாரும் சொல்லிப் பார்த்தா, மாட்டேங்கறான்?"

"இந்தக் காலத்தில கொஞ்சம் 'ஆடா'த்தான் இருக்கு. எடுத்துருவான்."

"அவனைவிடப் பிடிவாதமா இருந்தவனுங்களே கல்யாணம் ஆனதும் எடுத்ததைப் பார்த்திருக்கேன். ஆனா அவனைப் பார்த்தா கல்யாண கேசா தோணலை. ராமகிருஷ்ணர், விவேகானந்தர், ஜே. கிருஷ்ணமூர்த்தின்னா பேசிண்டிருக்கான்."

"ஒரு நா தூங்கிண்டிருக்கறப்போ பெண்டாட்டி நறுக்கிடுவா" என்றாள் வத்சலா.

"இவன் நிச்சயம் 'மாத்'ல ரிசர்ச் ப்ரொக்ராம் அல்லது எம் ஃபில், பிஎச்டின்னு போய்டுவான். இப்பவே சில தியரங்களை எல்லாம் செட் தியரி மூலமா ப்ரூவ் பண்ண முடியும்னு சொல்றான் . . ."

அப்போது எங்கள் வீட்டுக்கு வந்த ராகவன் சீனிவாசனைக் கண்டதும் குருவைப் பவ்யமாக அணுகி, "சார், நம்ம ஆத்துக்கும் வந்துட்டுப் போகணும்" என்றான்.

"சந்தேகம் கேக்கலைன்னா வரேன்பா!"

"இல்லை சார்."

"நாங்க உங்கிட்டே கேக்கும்படியான்னாப்பா இருக்கு. அது

சரி, நான் சொன்னேனே ஃபார்ம் அதை 'பில்அப்' பண்ணியா ஸ்காலர்ஷிப்புக்கு?"

"பண்ணிட்டேன் சார். ஆனா என் குடுமியை வெச்சுண்டு அங்கெல்லாம் போக முடியுமான்னு தெரியலை."

"முதல்ல அப்ளை பண்ணிப் பாரு. அப்புறம் குடுமி பெரிய விஷயம் இல்லை. வெட்டலாம், வளக்கலாம்!"

அவன் மையமாகப் புன்னகைத்தான்.

அவன் சென்றதும் வத்சலா, "இவனாவது வெட்டறதாவது. கல்யாணமாகி அந்தப் பொண்ணு தூங்கிண்டிருக்கறப்ப கத்திரிக் கோலை எடுத்து நறுக்குன்னு வெட்டி தூரப் போட்டாத்தான் உண்டு. இப்பவே என் கை துருதுருங்கறது. எதுக்காக அழிச்சாட்டியமா இவனுக்கு இத்தனை தலைமயிர்?"

எனக்கு வேலை கிடைத்து அலகாபாத் போய் ட்ரெயினிங் போஸ்டிங் எல்லாம் ஆகி, லீவில் திரும்பி வந்தபோது ராகவனைச் சந்தித்து இரண்டு வருஷங்களாகிவிட்டன.

"என்ன ராகவா, நீ அமெரிக்கா போகப்போறதாவும் ஸ்காலர்ஷிப் கிடைச்சதாகவும் சொன்னா?"

"ஆமாம் கெடைச்சது. நான் போகலை. எம்.எஸ். பண்ணிட்டு பிஎச்டி பண்ணறதுக்கு ஹார்வர்டில கெடைச்சது, ப்ரின்ஸ்டன்லயும் கெடைச்சது. நியூ ஜெர்சியில ..."

"ஏன் வேணாம்னுட்டே?"

"நான் வேணாங்கலை. விசா கிடைக்கலை. கான்சல்ல விசாவுக்குப் போயிருந்தபோது என் குடுமியைப் பத்தி பேச்சு வந்தது. அந்தப் பொம்பளை வைஸ் கான்சல் கேட்டா ... நான் அது என் சொந்த விஷயம்னேன் ...

"நீ 'இஸ்கான்' ஆசாமியா? ஏர்போர்ட்ல பஜனை பண்ணிப் பிரசாதம் கொடுப்பாளே அவங்க கோஷ்டியான்னா. இல்லைன்னேன்.

"இந்தத் தடவை விசா கொடுக்கலை. ரொம்ப பிரில்லியண்ட் நீ. அடுத்த தடவை கம் வித் அவுட் யுவர் லிட்டில் பூச். ஐ கிவ் யூ விசான்னா ... எனக்குக் கோபம் வந்தது. உங்க விசா யாருக்கு வேணும்னு வந்துட்டேன்."

"இப்ப என்ன பண்றே?"

"ஆனர்ஸ் கம்ப்ளீட் பண்ணிட்டேன். ஏஜி ஆபிஸ்ல செலக்ஷன் கிரேடு கிளார்க் பரிட்சை எழுதினேன். பாஸ் பண்ணிட்டேன். ஆர்டருக்கு வெய்ட் பண்றேன்."

அவன் குடுமி இப்போது இன்னும் பளபளவென்று, அவிழ்த்து விட்டால் குதிகாலைத் தொடும் போல இருந்தது.

"அம்மா கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டா" என்றான்.

"குடுமியை எடுத்திருந்தா நானே உன்னைக் கல்யாணம் பண்ணிண்டிருப்பேன் ராகவா!" என்றாள் வத்சலா, கண் சிமிட்டி.

ராகவன் புன்னகைத்து, "அதுக்குத்தான் செல்லத்தைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சேன். அத்தை பொண்ணு. குடுமியை எடுன்னு சொல்லமாட்டா" என்றான்.

"அப்படி என்ன அந்தக் குடுமி உசத்தி? அமெரிக்கா போறதைக் கூடத் தியாகம் பண்ணும்படி! அதைப் பிடிவாதமா வெச்சுண்டு என்னத்தை நிரூபிக்க விரும்பறே?"

"அப்படி ஏதும் இல்லை. தன்னுடைய தோற்றத்தைத் தீர்மானிக்கிறதுக்கு ஒருத்தருக்கு உரிமை இருக்குன்னு நம்பறேன். அது மட்டும் இல்லாம கேலி செய்வான்னு எதுக்குப் பயப்படணும்? செஞ்சா செஞ்சிட்டுப் போறாங்கற மனோநிலை வாழ்க்கைல ரொம்பத் தேவைப்படறது. சரி, நீங்க அவசியம் கல்யாணத்துக்கு வரணும்."

"ஆமா, உன் மேத்தமாட்டிக்ஸெல்லாம் என்ன ஆச்சு?"

"அதை விடலை. அது பாட்டுக்கு அது. இப்பல்லாம் ரிசர்ச் பேப்பர்ஸ் எழுதிண்டிருக்கேன். நம்பர் தியரி க்ரிப்ட்டோ அல்காதரிதம்ஸ்ல ... இண்டியன் மேத்தமாட்டிக்கல் ஜர்னல்ல, ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியாகியிருக்கு. அடுத்த வாரம் திருச்சி ஆர்இசியில இண்டர்நேஷனல் கான்பரன்சுக்கு ஒரு செஷனுக்கு என்னைத் தலைமை தாங்கக் கூப்பிட்டிருக்கா! மாத்தமாட்டிக்ஸ்தான் என் முதல் காதல். அமெரிக்காவில் இருந்தாலும் அதேதான்; சீரங்கத்தில குடுமி வெச்சுண்டு இருந்தாலும் மாத்தமாட்டிக்ஸ் மாறாது!"

"அப்ப குடுமியோடதான் போகப் போறியா?"

"அஃப் கோர்ஸ்! இது என்ன கேள்வி?"

லீவு முடிந்து திரும்பும்போது திருச்சி விமான நிலையத்தில் என்இபிசி விமானத்தைப் பிடிக்கக் காத்திருந்தபோது அடுத்து ராகவனைப் பார்த்தேன். கதர் சட்டையும் வேஷ்டியும் குடுமியாக.

"என்ன ராகவா ஏர்போர்ட்ல? எங்கயாவது பாரின் போறயா?"

"இல்லை, நான் சொன்னேன் பாருங்கோ கான்பரன்ஸ். அதில இஸ்ரேலிலிருந்து பெர்ன்ஸ்டைன்னு ஒரு ப்ரொபசர் வரார். அவரை வரவேற்க வந்திருக்கேன். ரிசப்ஷன் கமிட்டியில இருக்கேன்."

ஃபாக்கர் விமானம் வந்து, அதிலிருந்து இறங்கிய பதினைந்து பேரில் இந்த ப்ரொபசர் பெர்ன்ஸ்டைன் தனித்துத் தெரிந்தார். அவருக்கு ராகவன் மாலை போட, நல்ல உயரமாக இருந்ததால்

சற்று எம்பிப் போட வேண்டியிருந்தது.

தனக்கு எம்பிப் போட்ட மாலையைக் கழற்றி அவர் மீண்டும் ராகவனுக்கே போடுவது தெரிந்தது. அவனுடன் சிரித்துப் பேசிக் கொண்டே வந்தார்.

கிட்டத்தில் பார்த்தபோது ப்ரொபசர் நல்ல அழகான கட்டுக்குடுமி வைத்திருந்தார்.

1995